**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

**OS. No. 60/2023 நாள்.31.07.2025**

DW1- திரு நெடுமாறன் , த /பெ. திரு. தங்கவேல்

2ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

2ஆம் பிரதிவாதி முருகானந்தத்தை எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் 15ஆண்டுகளாக தெரியும். நான், 1, 2 பிரதிவாதிகள் சேர்ந்து விற்றதாக சொல்லியுள்ளேனே அந்த சொத்தின் உரிமையாளர் யார் என்றால் தண்டபாணி. நான் மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகள் கூட்டாக தொழில் செய்து வருவதாக சொல்கிறேனே தொழில் ஆவணம் பதிவு செய்யபட்டதா என்றால் இல்லை. அவ்வாறு வரக்கூடிய லாபத்தை நான்குபேரும் பிரித்துகொள்வதாக சொல்லியுள்ளேனே அதற்கு எழுத்து மூலமான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை . வாதி தெரியுமா என்றால் தெரியும். வழக்கு போட்டுள்ள புல எண் தெரியுமா என்றால் தெரியும். புல எண் என்ன என்றால் 116 மீதி மறதியாக உள்ளது. நான் பொது அதிகாரம் பெற்ற முகவராகதான் சொத்தை வாங்கினேன் என்றால் ஆமாம். ஏஜெண்ட் என்றால் சொத்தின் புல எண் கண்டிப்பாக தெரியவேண்டும் என்றால் ஆமாம். இந்த வழக்கில் நான் பொது அதிகார பெற்ற முகவராக செயல்பட்டேன் என்றும் எனக்கு புல எண் தெரியவில்லை என்றும் சொன்னால் ஆமாம். நான் ஒரு சொத்தை விற்கவேண்டும் என்றால் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டும் என்றால் ஆமாம். முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சொத்து புல எண் சம்மந்தமாக ஒப்பந்தம் ஏற்பட்டதா என்றால் இல்லை வாய்மொழியாகதான் பேசினோம். பிரமாண வாக்குமூலத்தில் சொத்தை விற்பனை செய்து முதல்வரிடம் கணக்கு ஒப்படைக்க வேண்டியதுதான் ஏஜெண்ட் கடமை என்றால் நாங்கள் அவரிடம் பணம் கொடுத்து பவர் வாங்கியதும் நாங்கள் விற்பதும் அவருக்கு தெரியும். தாவா தொடர்புடைய சொத்திற்கான முழு கிரயத்தொகை ரூ 40 லட்சம் தொகையை எந்த தேதியில் யார்யார் எவ்வளவு யாரிடம் ஒப்படைத்தோம் என்றால் நாலுபேரும் சேர்ந்து மொத்தமாக ரூ 40 லட்சத்தை தண்டபாணியிடம் கொடுத்தோம். 2ஆம் பிரதிவாதி முருகானந்தம் மூலமாக வாதிக்கு எவ்வளவு தொகை கொடுக்கபட்டது என்றால் 10 லட்சம் கொடுத்தார். என்னுடைய முதல்விசாரணை வாக்குமூலத்தில் நாங்கள் இச்சொத்தினை விற்பனை செய்தாலும், அந்த

சொத்துக்குரிய முழு கிரயத்தொகையையும் வாதி வசம் கொடுத்துவிட்டோம் என்று சொல்லியுள்ளேனே எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் 24.11.2017இல் கொடுத்தோம். நான் என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் நாங்கள் தற்சமயம் வாதிக்கு கணக்கு கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று சொல்லியுள்ளோம் என்றால் முதல்வருக்கு முகவர் கணக்கு கொடுக்கவேண்டும் என்பது சட்டம் என்றும், அவ்வாறு நாங்கள் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் பணத்தை முழுவதுமாக கொடுத்து கிரய பத்திரத்திற்கு பதிலாக பவர் வாங்கிகொண்டோம், அப்படி செய்ததற்கு காரணம் நாங்கள் உடனடியாக விற்கும் எண்ணத்தில் இருந்தோம். பொது அதிகார முகவர் எல்லா பணத்தையும் கொடுத்துவிட்டால் அதில் வரவு ரசீதை பெற்றுள்ளோமா என்றால் இல்லை. நாலுபேரும் கூட்டாக சேர்ந்துதொழில் செய்ததாகவும், 2ஆம் பிரதிவாதியுடன் விரிசல் ஏற்பட்டதாகவும் சொல்லியுள்ளோமே எந்த தேதியில் என்றால் தெரியவில்லை. என் முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள பி.சா.ஆ.1 ஆவணத்தில் 2ஆம் பிரதிவாதி முருகானந்தமும் சேர்ந்து பண மோசடி செய்ததாக புகாரில் உள்ளது என்றால் ஆமாம். எனக்கும் முருகானந்தக்கும் விரிசல் ஏற்பட்டதாக சொல்கிறேனே அது புகாருக்கு முன்பா என்றால் ஆமாம் அது ஒரு வருடத்திற்கு முன்பு. 2ஆம் பிரதிவாதி முருகானந்தம் என்னுடன் சேர்ந்துதான் பொதுஅதிகார முகவர் என்ற முறையில்தான் 5ஆம் பிரதிவாதிக்கு வாங்கினார் என்றும் அவர் பங்கு தொகையை வங்கி மூலம் திருப்பி அனுப்பிவிட்டார் என்றால் தெரியாது. ரூ.22,53,000/- 1 முதல் 4 பிரதிவாதிகளாகிய எங்களிடம் திரும்ப கேட்டு சம்மந்தமாக எனக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் ஆமாம்.

**தொடர்ச்சிக்காக வழக்கறிஞர் வேண்டுகோள் இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-ப .நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.